

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

# வனம்

மானியக் கோரிக்கை எண் :54

அறிவிப்புகள் 2024-2025

## டாக்டர் மா.மதிவேந்தன்

வனத்துறை அமைச்சர்

# வனத்துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வனத்துறையின் சார்பில் 10 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

**டாக்டர் மா.மதிவேந்தன்**

**வனத்துறை அமைச்சர்**

1. **மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பக அறக்கட்டளையில் உள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் மூலம் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் தீவில் சமூக அடிப்படையிலான சூழல் சுற்றுலா 15.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

இராமேஸ்வரம் தீவு மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகத்தின் ஒரு பகுதியாகும். தனுஷ்கோடி ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி சுற்றுலா பயணிகள் வருகை தரும் ஒரு முக்கியமான சுற்றுலா தலமாகும். முன்மொழியப்பட்ட சூழல் சுற்றுலா உள்ளூர் சமூகத்திற்கு பயனளிப்பதுடன், மேம்பட்ட விழிப்புணர்வு மூலம் கடல் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கும் உதவும். இராமேஸ்வரம் பவளப் பாறை, படகு சவாரி, சதுப்பு நில நுழைவுவாயில் பகுதி, குருசடை தீவு, சூழல் சுற்றுலா,

பறவைக் கண்காணிப்பு தளங்கள், ஆமைகள் விளக்க மையம் மற்றும் கோதண்டராமர் கோயில் கழிமுகப் பகுதி மேம்பாடு ஆகியவை இந்த சூழல் சுற்றுலா மேம்பாட்டு திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சில நடவடிக்கைகள் ஆகும். இத்திட்டம் 15.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**Community Based Ecotourism in Rameswaram Island will be developed at an estimated cost of Rs.15.00 Crore through Community Based Organizations in the Gulf of Mannar Biosphere Reserve Trust, Ramanathapuram District.**

**ஆசிய யானைகள் மற்றும் ஆப்பிரிக்க யானைகள் என இரண்டு வகையான யானை இனங்கள் உள்ளன**

**2. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வன உயர்பயிற்சியக மரபியல் பிரிவில் பூர்வீக இன விதை பெட்டகம் 10.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

மரபியல் பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதற்கும் நிலைத்த வன மேலாண்மையினை ஊக்குவிக்கவும், வன மரபணு வளத்தைப் பாதுகாப்பதற்கும் நவீன வன மரபியல் வள மேலாண்மை வலையமைப்பை நிறுவுவது அவசியம். ஜெர்ம்ப்ளாசம் சேகரிப்பு, சேமிப்பு, இனப்பெருக்கம், விதை மற்றும் நாற்றுக்களை கையாளுதல், விதை சோதனை, குளோன் வங்கிகள், அதன் வாழ்விடம் மற்றும் வெளியிடத்தில் பாதுகாப்பு மற்றும் வன மரபணு வளங்களின் நிலையான மேலாண்மை ஆகியவற்றுக்கான மையமாக இந்த பூர்வீக இன விதை பெட்டகம் செயல்படும்.

விதை நிலைத்தன்மையைப் பாதுகாப்பதற்காகவும், ஆண்டு முழுவதும் நடவு செய்வதற்காக விதைகளை வழங்கவும், கிரயோஜெனிக் குளிர்சாதன வசதியுடன் கூடிய சேமிப்பு பெட்டகம் 10.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**Native Species seed vault with Cryogenic facilities in Tamil Nadu Forest Academy, Coimbatore will be established at a cost of Rs.10.00 Crore.**


**யானையின் கர்ப்ப காலம் 22 மாதங்கள்**

3. **தமிழ்நாடு மரங்கள் (அரசு நிலங்கள்) பாதுகாப்பு சட்டம், 2024 அறிவிக்கை செய்யப்படும்.**

நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் அதிகரித்து வரும் மக்கள் தொகை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், அரசு நிலங்களை பொருளாதார ரீதியாகப் பயன்படுத்துவதற்கான தேவை அதிகரித்து வரும் சூழ்நிலையில், சூழலியல், வனப்பரப்பு மற்றும் மரப்பரப்புகளைப் பாதுகாக்கும் நோக்கில் இச்சட்டம் முன்மொழியப்படுகிறது. நாட்டின் புவியியல் பரப்பில் 33% வனம் அல்லது பசுமைப்போர்வை அவசியம் என்ற தேசிய இலக்கை அடைய இந்த அரசு உறுதியாக உள்ளது. அரசுக்குச் சொந்தமான நிலங்களில் மரங்களை வெட்டுவதற்கான விரிவான விதிமுறைகளை வகுப்பதன் மூலம் சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்க இச்சட்டம் உதவும்.

The Tamil Nadu Preservation of Trees (Government Lands) Act, 2024 will be notified.

**யானைகளுக்கு வியர்வை சுரப்பிகள் இல்லை**



**4. தமிழ்நாடு மாநில வனக் கொள்கை 2024– வெளியிடப்படும்.**

தமிழ்நாடு மாநில வனக் கொள்கை 2018–ல் வெளியிடப்பட்டது. இந்த கொள்கையானது மாநிலத்திற்குள் வன வளங்கள் மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாட்டிற்கான கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் உத்திகளை கோடிட்டுக் காட்டுகிறது.

வனப் பாதுகாப்புச் சட்டம், 1980, வன உயிரின பாதுகாப்புச் சட்டம், 1972, ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய திருத்தங்கள், வனப் பாதுகாப்பு, பல்லுயிர் மறுசீரமைப்பு, நிலையான வன மேலாண்மை, சமூகப் பங்கேற்பு, வாழ்வாதார ஆதரவு, காலநிலை மாற்றத்தைத் தணித்தல் மற்றும் தழுவல், கூட்டாண்மை மற்றும் கூட்டுறவு ஆகியவற்றில் புதிய பரிமாணங்களைக் கொண்டு வந்துள்ளன.

எனவே, வனப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், காடுகளை மீட்டெடுப்பதில் புதிய பரிமாணங்களை கொண்டு வருவதற்கும், புதிய தமிழ்நாடு மாநில வனக் கொள்கை, 2024 இந்த அரசால் வெளியிடப்படும்.

**The Tamil Nadu State Forest Policy 2024 will be notified**



**யானையின் துதிக்கை 40 ஆயிரம் தசைகளால் ஆனது**


**5. “டாக்டர் ஏஜேடி ஜான்சிங் வன உயிரினப் பாதுகாப்பு விருது” 25 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையுடன் வழங்கப்படும்.**

அண்மையில் காலமான இந்தியாவின் தலைசிறந்த வன உயிரின உயிரியலாளரும், தமிழ்நாட்டைச் சேர்ந்த வனப்பாதுகாப்பு ஆர்வலரும், உலக அளவில் புகழ்பெற்ற வன உயிரின காவலருமான டாக்டர் ஏஜேடி ஜான்சிங் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வன உயிரின பாதுகாப்பிற்கு அளித்த பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் வன உயிரின வார விழா கொண்டாட்டத்தின் போது வன உயிரின பாதுகாப்பில் சிறந்த பங்களிப்பை வழங்கிய வன உயிரின ஆர்வலர் ஒருவருக்கு ஆண்டுதோறும் “டாக்டர் ஏ.ஜே.டி. ஜான்சிங் வன உயிரின பாதுகாப்பு விருது” வழங்கப்படும். இந்த விருது ஒரு பாராட்டுப்

பத்திரம் மற்றும் 25 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையை உள்ளடக்கியதாக இருக்கும்.

**Dr. AJT Johnsingh Wildlife Conservation Award will be constituted with a citation and a prize money of Rs.25 Lakhs.**

**யானைகள் ஒரு நாளைக்கு 16 மணி நேரம் உணவு சேகரிப்பதற்கு செலவு செய்கின்றன**



**6. நாமக்கல் மாவட்டம் கொல்லி மலையில் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரவு வான் பூங்கா அமைக்கப்படும்.**

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலையில் இரவு வானத்தின் உள்ளார்ந்த வனப்பை இயற்கை கலாச்சார மற்றும் வரலாற்று வளமாக அங்கீகரிக்கும் வகையில் ரூ.1.00 கோடி செலவில் இரவு வான் பூங்கா அமைக்கப்படும்.

பாதுகாக்கப்பட்ட பகுதியில் இயற்கை பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக இயற்கை இருளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளது. இத்தகைய இரவுப் பூங்காக்கள் உலகளாவிய அளவில் கணிசமான ஆபத்தை விளைவிக்கும் ஒளி மாசுபாட்டின் உலகளாவிய அச்சுறுத்தலில் இருந்து விலைமதிப்பற்ற

இயற்கை வளங்களைப் பாதுகாக்க உதவும். இது இரவு நேர விலங்குகளுக்கு இணக்கமான ஒரு பூங்காவாக இருக்கும். இது மின்சார விளக்குகளின் பயன்பாட்டைக் குறைத்து இரவு வானத்தில் நட்சத்திரங்களைப் பார்ப்பதை அதிகரிக்கிறது. இது இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இரவு வான் பூங்காவாக அமையும்.

**A dark sky park will be set up at Kolli Hills, Namakkal at a cost of Rs.1.00 crore.**


**கரி, பிடி, கைம்மா, களிறு, வேழம், வாரணம், என்பன யானையின் சில பெயர்கள்**

7. **தமிழ்நாட்டின் கடற்கரை பகுதிகளில் ஆமைகளை பாதுகாக்கும் பொருட்டு வருடத்திற்கு 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆமை பாதுகாவலர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்**

தமிழ்நாட்டின் கடற்கரைக்கு ஆண்டுதோறும் ஆலிவ் ரிட்லி (சிற்றாமை) ஆமைகள் மற்றும் பச்சை ஆமைகள் வருகை தருகின்றன. ஆமைகளை பாதுகாக்கும் நோக்கில் உள்ளூர் மீனவ தன்னார்வலர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்களை உள்ளடக்கிய ஆமை பாதுகாவலர் குழுக்கள் ஆமைகள் முட்டையிடும் பகுதிகளை பாதுகாப்பதற்கும், ஆமை குஞ்சுகளை மீண்டும் கடலுக்குள் பாதுகாப்பாக அனுப்ப உதவும் பணிகளிலும் ஈடுபடுத்தப்படும். வருடத்திற்கு

1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

**Sea Turtles in coastal areas of Tamil Nadu will be protected by engaging Turtle Guardians at a cost of Rs.1.00 Crore per annum.**




**யானையின் பல்லின் நீட்சியே தந்தமாகும்**

**8. தஞ்சாவூர் கோட்டம், கும்பகோணம் சரகம், அணைக்கரையில் முதலைகள் பாதுகாப்பு மையம் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

தஞ்சாவூர் வனக் கோட்டத்திற்கு உட்பட்ட கும்பகோணம் வனச்சரக எல்லைக்குள் உள்ள அணைக்கரைப் பகுதி தமிழ்நாட்டில் உள்ள சதுப்பு முதலைகளின் (Crocodylus palustris) முக்கியமான வாழ்விடமாக உள்ளது. உள்ளூர் சமூகங்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் முதலைகளின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், மனித–முதலை முரண்களை தடுக்கும் வண்ணம் முதலை இனத்தினை பாதுகாத்து மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் வகையிலும், அணைக்கரையில் முதலைகள் பாதுகாப்பு மையம் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

A crocodile conservation centre will be set up at Anaikarai in Kumbakonam Range of Thanjavur Division, at a cost of Rs 2.50 crore.




யானைக் கூட்டத்தை வயதான அனுபவம் மிகுந்த பெண் யானையே வழி நடத்தும்

**9. கூடலூர் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள ஆர்கிடேரியங்கள் 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

ஆர்க்கிடேரியம் என்பது மரங்களில் தொற்றி வளரும் பல்வேறு அழகான பூக்கும் தாவரங்களைக் கொண்ட தொகுப்புகளை வளர்ப்பதற்கும் காட்சிப்படுத்துவதற்கும் வடிவமைக்கப் பட்ட ஒரு சிறப்பு வசதியாகும். ஆர்க்கிடேரியங்கள் ஏற்கனவே ஆனைமலை புலிகள் காப்பகம் மற்றும் கூடலூரில் நிறுவப்பட்டுள்ளன, பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் தேவைக்காகவும் உள்ளூர் சமூகத்திற்கு ஆர்க்கிட் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை புரிய வைக்கவும் கூடலூர் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள ஆர்க்கிடேரியங்கள் நவீன வசதிகளுடன் 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

Orchidariums at Gudalur and Anamalai Tiger Reserves will be upgraded at a cost of Rs.3.00 crore.

யானைகள் நாள் ஒன்றுக்கு சுமார் 140 முதல் 270 கிலோ வரை உணவு உட்கொள்கின்றன




**10. தமிழ்நாட்டின் வனப்பகுதிகளில் உள்ள மலையேற்ற வழித்தடங்களுக்கான வரைபட புத்தகங்கள் உருவாக்கப்படுவதுடன், அத்தடங்களின் அடிப்படை வசதிகள் 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டின் வனப் பகுதிகளில் உள்ள 40 மலையேற்ற வழித்தடங்களை தமிழ்நாடு அரசு கண்டறிந்துள்ளது. அந்த மலையேற்ற வழித்தடங்களுக்கான வரைபட புத்தகங்கள் உருவாக்கப்படுவதுடன், அத்தடங்களில் தேவையான அடிப்படை வசதிகள் 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

A Trekking Atlas with 40 trekking routes in Tamil Nadu will be prepared and basic infrastructure facilities will be developed in all identified routes at a cost of Rs.4.00 Crore.

**யானைகளின் ஆயுட்காலம் 70–80 வருடங்கள்**



**டாக்டர் மா.மதிவேந்தன்**
**வனத்துறை அமைச்சர்**


யானைகளை பாதுகாத்து
வன வளத்தை பேணிக் காப்போம்